நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## S.T.C No.733/2024

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேதுவராயன் |
| தந்தை / கணவர் பெயர் | : | வரதராஜ் |
| கிராமம் | : | எம்.பழக்காரனூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 30 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இரண்டாம் எதிரி ஆஜரில் இல்லை மற்ற எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.58PM)

1. நான் தற்போது எம் பலக்காரனூரில் குடியிருந்து TVS நிதி நிறுவனத்தில் கடன் தொகை வசூலிக்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 2வது எதிரி திருநாவுக்கரசு என் பலக்காரனூரில் குடியிருந்து வருகிறார்கள்.

அவர்களை எனக்கு தெரியும். எங்கள் விவசாய நிலம் சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. 04.07.2022 ம் தேதி காலை 9 மணியிலிருந்து 9.30 மணி அளவில் நானும் எனது அம்மா குமுதவள்ளியும் எங்களுடைய காட்டில் புல் பூண்டு பிடுங்கி கொண்டிருந்தோம். அப்போது மாரியம்மாளும் அவருடைய மகன்கள் திருநாவுக்கரசு மற்றும் ராமலிங்கமும், மற்றும் மாரியம்மாளின் அண்ணன் மகன் பெரியண்ணனும் அங்கு வந்து எனது அம்மாவை பார்த்து தேவடியா கண்டராஓலி என்று சொல்லி எங்களுக்கு சொத்துக்கு நீ பிள்ளையா என்று கேட்டார்கள்.

2. என்னை ராமலிங்கம் கையால் அடித்தார். மாரியம்மாள் எனது அம்மாவின் முடியை பிடித்து கீழே தள்ளி காலால் உதைத்தார். ராமலிங்கம் கையில் இருந்த குச்சியை எடுத்து இடது கன்னத்தில் அடித்தார். பெரியண்ணன் கீழே கிடந்த கட்டை எடுத்து அடிடா என்று கொடுத்தார்.திருநாவுக்கரசு கையில் இருந்த கோலால் என்னுயை முதுகு முட்டிய்ல அடித்தார்.
3. நான்கு நபர்களும் கட்டையை காண்பித்து இந்த முறை தப்பித்து விட்டீர்கள் என்றைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாம்டேன் என்று சொன்னார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேந்தேன். என்னுடைய அம்மாவும் சிகிச்சைக்காக சேந்தார். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் ஒன்று பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நில சம்மந்தமாகத்தான் எங்கள் இரு தரப்பினருக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அந்த நிலத்தின் பரப்பளவு 3 ஏக்கர் ஆகும் அதனுடைய சர்வே எண் 362/2 ஆகும். அதனுடைய பட்டா எண் எனக்கு தெரியாது. மேட்டூர் வட்டம் குட்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தது.
2. மேற்படி நிலம் எனது அப்பா கிரயம் பெற்றது. பூர்வீக சொத்து அல்ல. எனது அப்பா மேற்படி நிலத்தை 1990 ஆம் வருடம் வாங்கினார். எனக்கு தற்போது 30 வயது ஆகிறது. எனது அப்பா மேற்படி நிலத்தை கிரைம் வாங்கும்போது நான்

பிறக்கவில்லை. எனது அப்பாவுக்கு அப்பொழுது திருமணமாகவில்லை. எனது அப்பாவுக்கு கிரயம் கொடுத்த நபருக்கு மொத்தம் ஏழு ஏக்கர் பாத்தியம் அதில் மூன்று ஏக்கர் 20 சென்ட் எனது அப்பா கரையும் பெற்றார்.

3. மேற்படி நிலம் சம்பந்தமாக எதிரி மாரியம்மாள் தான் முதல் முறையாக மேட்டூர் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நானும் எனது அம்மாவும் பிரதிவாதிகள் என்றால் சரிதான். நாங்கள் தனியாக மாரியம்மாள் மீதும் அவரது குடும்பத்தார் மீதும் தனியாக சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. மாரியம்மாள் பாகப்பிரிவினை கேட்டு மேற்படி சிவில் வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் அப்பா ஆஜர் எதிரி மாரியம்மாள் என்பவரின் அப்பாவிடம் தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.
4. மேற்படி வழக்கில் இதுவரை தீர்ப்பு எதுவும் வரவில்லை என்றால் சரிதான் இதுவரை நிலுவையில் தான் இருக்கிறது என்றால் சரிதான். தீர்ப்பு வரும் வரை பிரதிவாதிகள் யாரும் நிலத்திற்குள் நுழையக்கூடாது என்று அ.வ. 9 /2013 என்ற எண்ணில் உறுத்துக்கட்டளை பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உறுத்து கட்டளை நிலுவையில் இருந்தும், அதை மதிக்காமல் நாங்கள்தான் அத்துமீறி நுழைந்து புல் பூண்டு பிடுங்கினோம் என்றால் சரியல்ல அது எங்களுடைய நிலம் தான். அந்த வழக்கில் எனது அப்பா கரையும் பெற்ற 3 ஏக்கர் 20 சென்ட் நிலத்தையும் சேர்த்து பூர்வீக சொத்து என்று குறிப்பிட்ட தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.
5. நாங்கள் மேற்கண்டவாறு புல் புடுங்க போகும்போது மாரியம்மாள் அந்த இடத்தில் இல்லை. நாங்கள் புல்புடுங்கிய இடத்திற்கு அக்கம் பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான் .சுமார் 3,4 வீடுகள் இருக்கும். நாங்கள் புல்பிடுங்கிய இடத்திலிருந்து பார்த்தால் நங்கவள்ளியில் இருந்து மேச்சேரி செல்லும் மெயின் ரோடு தெரியும் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் நடந்து தான் வந்தார்கள். நானும் எனது அம்மாவும் புல் போடுங்க நடந்து தான் சென்றோம். புல் படுங்க சென்ற இடத்திற்கும் இடத்திற்கும் நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்கும் சுமார் 100 மீட்டர் இடைவெளி தான் இருக்கும்.
6. எங்களது வீட்டு வாசல் தெற்கு பார்த்து உள்ளது. மாரியம்மாளின் அப்பா செல்லமுத்து வாத்தியார் என்பவரிடம் நிலத்தை அடமானம் வைத்திருந்தார்.

பணம் கொடுக்காததால் செல்லமுத்து வாத்தியார் சங்ககிரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கை முடிப்பதற்காக என் அப்பா நீதிமன்றத்தில் பணம் செலுத்தி மேற்படி நிலத்தை கிரயம் பெற்றுக்கொண்டார்.

7. சம்பவ இடத்தில் மரங்கள் எதுவும் இல்லை. நானும் எனது அம்மாவும் புல்புடுங்கிக் கொண்டிருந்தபோது எதிரிகள் வந்து எங்களை கூட்டமாக சேர்ந்து அடித்து விட்டார்கள். அடிபட்டவுடன் எனது அம்மாவுக்கு தான் மயக்கம் வந்தது. எனக்கு மயக்கம் வரவில்லை. எனது அம்மாவுக்கு மருத்துவமனை சென்று தான் மயக்கம் தெளிந்தது. கூட்டமாக சேர்ந்த அடித்ததால் எனக்கும் எனது அம்மாவுக்கும் நிறைய இடங்களில் அடிப்பட்டு விட்டது என்றால் சரிதான். கூட்டமாக சேர்ந்து அடித்ததால் யார் யார் எங்கு என்னையும் எனது அம்மாவையும் அடித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல.

8. முதலில் என்னை தான் அடித்தார்கள். எனது வீட்டிற்கு மேற்கு பக்கமாக நானும் எனது அம்மாவும் புல்புடுங்கிக் கொண்டிருந்தோம். வைத்தியலிங்கம் காட்டுக்கு கொஞ்சம் முன்னால் நாங்கள் புல் புடுங்கிக் கொண்டிருந்தோம்.

9. ராமலிங்கம் கையாளும் கட்டையாலும் தான் அடித்தார் கம்பியால் அடிக்க வில்லை. அடித்ததில் எனக்கு ரத்தம் வந்தது. சட்டை நனைந்து விட்டது. சண்டையை யாரும் தடுக்க வரவில்லை. சுமார் அரை மணி நேரம் சண்டை நடந்திருக்கும். இந்த வழக்கின் நான்காம் எதிரி பெரியண்ணன் என்பவர் நடக்க முடியாத ஊனமுற்ற நபர் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து மேட்டூர் மற்றும் ஓமலூர் ஒரே தூரத்தில் தான் உள்ளது. சண்டை நடந்தவுடன் நங்கவள்ளி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தீர்களா என்றால் ஆம். நானும் எனது அம்மாவும் காவல் நிலையம் செல்லும் போது காலை 10 லிருந்து பத்தரை மணிக்குள் இருக்கும். புகாரை நான் தான் எழுதினேன். புகாரை வாங்கிக்கொண்டு போலீசார் நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள் என்றால் இல்லை புகாரை வாங்கிக் கொண்டு மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள்.

10. போலீசாரிடம் ரத்தம் வடிந்த சட்டையை காட்டினேன் ஆனால் அவர்கள் அதைக் கேட்டு பெற்றுக் கொள்ளவில்லை. மேட்டூர் தாலுகாவில் தான் இருக்கிறோம் ஓமலூர் தாலுக்கா அல்ல. காவல் நிலையத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னதால் நாங்கள் ஓமலூர் அரசு

மருத்துவமனைக்கு சென்றோம். காவல் நிலையத்தில் ஒரு அரை மணி நேரம் இருந்திருப்போம் நாங்கள் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது மதியம் சுமார் 12 மணி இருக்கும்.

11. நங்கவள்ளியிலேயே காவல் நிலையத்துக்கு அருகில் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு நங்கவள்ளி அரசு மருத்துவமனைக்கு சென்றோம் அங்கு ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னதால் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நங்கவள்ளி அரசு மருத்துவமனையில் எங்களுக்கு முதலுதவி சிகிச்சை எதுவும் கொடுக்கப்படவில்லை ஓமலூர் மருத்துவமனைக்கு போக சொல்லி விட்டார்கள். எனது அம்மாவும் நானும் எனது தம்பியின் இருசக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது தம்பி தமிழ்ச்செல்வன் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினார். ஓமலூர் மருத்துவமனையில் எனது அம்மாவும் நானும் தான் சிகிச்சையில் சேர்ந்தோம்.

12. சம்பவத்துக்கு மறுநாள் தான் காவல்துறையினர் மருத்துவமனைக்கு விசாரணைக்கு வந்தனர். வந்தவர் காவலர்தான் உதவி ஆய்வாளர் இல்லை. நடந்து விவரங்களை போலீசார்தான் எழுதிக் கொண்டார்கள் நான் எழுதிக் கொடுக்கவில்லை. அதில் கையொப்பம் மட்டும் தான் போட்டேன் என்றால் சரிதான். நான் குறுக்கு விசாரணையில் சொன்ன சங்கதிகளை சொல்ல சொல்ல போலீசார் எழுதிக் கொண்டார்கள் அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியும்.

13. நான் சொன்னவாறு நானும் எனது அம்மாவும் புல்புடுங்க செல்லவில்லை என்றாலும் நீதிமன்ற உத்தரவை தெரிந்து கொண்டே வேண்டுமென்றே நிலத்திற்கு அத்துமீறின் நானும் எனது அம்மாவும் நுழைந்து பிரச்சனையை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. சிவில் வழக்கை திசை திருப்பும் நோக்கில் இந்த வழக்கில் பொய்யான புகாரை அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் நானும் எனது அம்மாவும் சேர்ந்து எதிரிகளை அடித்து விட்டதாக வழக்கு உள்ளது என்றால் சரிதான். இந்த சம்பவம் நடந்த இடம் ஒரு தனி நபருக்கு சொந்தமான இடம் என்றாலும் அது ஒரு பொது இடம் இல்லை என்றாலும் சரிதான்.

14. நான்தான் ஆஜர் எதிரி மாரியம்மாள் மற்றும் அவரது மகன் ராமலிங்கம் ஆகிய இருவரையும் தாக்கி காயப்படுத்தி விட்டு அவர்கள் இருவரும் காலை 11 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து விட்டனர் என்றாலும் அதை அறிந்து கொண்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி அதன் பிறகு காவல் நிலையத்தில் போய் புகார் அளித்துவிட்டு ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக நாங்கள் சேர்ந்து கொண்டோம் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் உண்மையில் நான் தான் எதிரிகளை அடித்து விட்டேன் என்றாலும் நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் சரியில்லை. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.47PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**